நகராட்சி அலுவலகம்
பொன்னேரி .

கூட்டம் எண். 30/ 2023 நாள். 22.12.2023

## சாதாரணக்கூட்டம்

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத் தலைவர் டாக்டர் . திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் M.B.B.S., D.G.O அவர்களின் தலைமையில் **2023** ஆம் ஆண்டு டிசம்பர் மாத **28.12.2023** வியாழக்கிழமை முற்பகல் **11.00** மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நடைபெறும் . அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட உள்ளதால் துணைத்தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நகர்மன்றத்தலைவர்**
**பொன்னேரி நகராட்சி**

## நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்

### பொருள் எண் 1

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் டிசம்பர் **2023** மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மான எண்: 370 நாள்: **28.12.2023**

**தீர்மானம்:** இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் Dec. 2023 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்கு மன்றம் அனுமதி வழங்குகிறது.

### பொருள் எண் 2

இந்நகராட்சியின் பொறியாளர் அவர்களின் டிசம்பர் **2023** மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மான எண்: 371 நாள்: **28.12.2023**

**தீர்மானம் :** பொறியாளர் அவர்களின் Dec. 2023 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்கு மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 3

பொன்னேரி நகராட்சியில் வார்டு எண் 27 பெருமாள் நகர் மற்றும் நேதாஜி அவென்யூ ஆகிய பகுதிகளில் உள்ள தெருமின்கம்பங்களில் தெருமின்விளக்குகள் உபயோகத்திற்காக பயன்படுத்தப்படும் பிரத்யேக மின்வயர்கள் ( Street Light Line ) மற்றும் பொருத்தி தருவதற்கு உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், பொன்னேரி அவர்களுக்கு கடிதம் அனுப்பியதில் கீழ்க்காணும் விவரப்படி கேட்பு வரப்பெற்றுள்ளதால் தொகை செலுத்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| | | |
|---|---|---|
| 1 | வார்டு எண் 27 பெருமாள் நகர் முதல் தெரு, பொன்னேரி | ரூ. 83,040 /- |
| 2 | வார்டு எண் 27 நேதாஜி அவென்யூ, பொன்னேரி | ரூ. 90,950 /- |

அலுவலகக்குறிப்பு

1. அவசியம் கருதி மேற்படி செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம் .

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

( ந.க.எண் 262 /2023 /இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 372 நாள்: 28.12.2023

**தீர்மானம் :** Wd 27 – பெருமாள் நகர், நேதாஜி அவென்யூ – ஆகிய பகுதிகளில் – தெரு மின்கம்பங்களில் தெரு மின்விளக்குகள் உபயோகத்திற்கு பிரத்யேக மின்வயர்கள் மின்சார வாரியத்திலிருந்து கேட்பு வரப்பெற்றுள்ளதால் – ரூ.83040/– 90,950/– செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும், பணியின் அவசியம் கருதி, பணியினை நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று, நடவடிக்கை மேற்கொண்டமைக்கு – மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.

## பொருள் எண் 4

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி 2023–24–ம் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள 12.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 10 தேரடி பர்மா நகர் மற்றும் 11 வது வார்டு தேரடி 4வது குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 14.80 | RDS & Co இலுபாக்கம் , பொன்னேரி | மதிப்பீட்டை விட 0.04% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எஸ். ஆறுமுகம் , ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.05% அதிகம் |
| 2 | வார்டு எண் 14 தண்டபாணி விரிவாக்கம் சாலை சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 | எஸ்.கே.பூபாலன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.09% குறைவு |
| | | | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.14% அதிகம் |
| 3 | சேதமடைந்துள்ள சாலைகளையும், தற்காலிகமாக WMM ( Wet mix Mecadam) கொண்டு சீரமைத்தல் | 9.50 | S.பிரகாஷ், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.06% குறைவு |
| | | | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.99% அதிகம் |
| 4 | அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான 50 எண்ணிக்கை பிளாஸ்டிக் நாற்காலிகள் மற்றும் 2 எண்ணிக்கை மின்விசிறிகள் சப்ளை செய்தல் | 0.625 | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட0.22% குறைவு |
| | | | A.T.சந்தானம், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.22% அதிகம் |
| 5 | 13வது வார்டு கிருஷ்ணசாமி தெரு , நீலிஅப்பாதுரைதெரு மற்றும் 14வது வார்டு தண்டபானி நாடார் தெருக்களில் வேகத்தடை அமைத்தல் | 3.00 | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.08% குறைவு |
| | | | A.T.சந்தானம், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 2.00% அதிகம் |
| 6 | வார்டு எண் 7 பாரதி நகர் 1வது குறுக்கு தெருவிற்கு தார்ச்சாலை அமைத்தல் | 2.10 | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.06% குறைவு |
| | | | A.T.சந்தானம், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.55% அதிகம் |
| 7 | வார்டு எண் 20 ஜவகர் தெரு மற்றும் வார்டு எண் 21 அன்னை தெரசா தெருவில் விடுபட்ட பகுதிகளுக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.20 | எஸ்.கே.பூபாலன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.03% குறைவு |
| | | | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.06% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

1 பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

( ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 373 நாள்: **28.12.2023**

**தீர்மானம் :** 12.12.2023 – அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் **–** குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த **14.80** L **/–** RDS & Co இலுப்பாக்கம் Wd 10 & 11 பொன்னேரி, **5.00** L **/–** wd 14 S.K.Boobalan. WWM 9.50/- S.Prakash /Plastic – 50 Nos for office use only 0.625 L /- B.Jotheeswaran & Wd 13 & 14 Speed Break Rs. 3.00 L/- ,Wd 7, Bharathi Nagar 1st cross st – தார்ச்சாலை **2.10** L **/–** B. Jotheswaran, Wd 20 & 21 Annai Therasa CC Road S.K.Boobalan ரூ **1.20** L **/–** மேற்கண்ட ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 5</u>

பொன்னேரி நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள Bolero வாகனம் எண் TN18BK4856 பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு பணி செய்த வகையில் அதற்கான தொகை ரூ.**52,084/-** வழங்கிடுமாறு Zulaikha Motors Private Ltd , அம்பத்தூர், சென்னை **58** நிறுவனம் மூலமாக பட்டியல் எண் **9759** நாள் **27.11.2023** மற்றும் **16.12.2023-** ன்படி வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை அந்நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பணியின் அவசர அவசியத்தினை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை பொதுநிதியில் வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். **562** /2021/அ**1**)

நகர்மன்ற தீர்மான எண்: 374 நாள்: **28.12.2023**

**தீர்மானம்:** Rolers – Vehicle. எண். TN18BK4856 பழுதுநீக்கம் , பராமரிப்பு பணி செய்த வகையில், தொகை **52084/–** Zulaikha Motors Private Ltd , அம்பத்தூர், சென்னை **58.** பட்டியல் எண் **9759** நாள் **27.11.2023** மற்றும் **16.12.2023-** ன்படி தொகையினை வழங்கிட முன் அனுமதி பெற்று. பொது நிதியில் வழங்கியதற்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 6</u>

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி **2023–24–**ம் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள **14.12.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்வாய்களை தூர்வாரும் பணி மேற்கொள்ளுதல் | 6.00 | திரு. எஸ் பிரகாஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட **0.30%** குறைவு |
| | | | திரு. பி.ஜோதீஸ்வரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட **0.62%** அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்படி பணியில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த திரு. எஸ் பிரகாஷ் ( SSB Enterprises ) என்பவருக்கு பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி ஒப்பந்ததாரருக்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம் .

( ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 375 நாள்: **28.12.2023**

**தீர்மானம் :** நகராட்சி பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்வாய்களை தூர்வாரும் பணி மேற்கொள்ள **14.12.2023** அன்று குறைந்த ஒப்பந்தபுள்ளி கோரிய திரு.S.Prakash-க்கு பணி அவசியம் கருதி, பணி உத்தரவு வழங்க – மன்றம் அனுமதி அளிக்கிறது.

<u>**பொருள் எண் 7**</u>

பொன்னேரி நகராட்சிக்கு சொந்தமான கடைகள் நீண்ட நாட்களாக ஏலம் கோரப்படாமல் காலியாக உள்ளது. இதனால் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே கீழ்காண் விபரத்தில் உள்ள கடைகளுக்கு ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

| **வ.எண்** | **கடை விவரம்** | **கடை எண்** | **எண்ணிக்கை** |
|---|---|---|---|
| **1** | ஹரிஹரன் பஜார் கடைகள் APAMT | கடை **1** முதல் **13** வரை | **13** கடைகள் |
| **2** | தேரடி புதிய பேரூந்து நிலைய கடைகள் | கடை எண் **19** | **1** கடை |
| **3** | ஹரிஹரன் பஜார் கடைகள் IDSMT | கடை எண் **12,13,14** | Pumping Station வளாகத்தில் உள்ள கடைகள் |

மேற்படி **17** கடைகளுக்கு ஏலம் கோரிடவும், அதற்கான விளம்பரம் தினசரி நாளிதழில் பிரசுரம் செய்திடவும் அதற்கான செலவினத்திற்கு மன்றத்தில் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி அளிக்கலாம் .

( ந.க. எண்: 312 / 2022/ அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 376 நாள்: **28.12.2023**

**தீர்மானம் :** நீண்ட நாட்களாக ஏலம் கோரப்படாமல் உள்ளதால் , **11** கடைகளுக்கு ஏலம் ஒப்பந்தபுள்ளி கோரிடவும், அதற்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 8

பொன்னேரி நகராட்சி 7வது வார்டு எல்லைக்குட்பட்ட கள்ளுக்கடைமேடு சாலையில் பழவேற்காடு நெடுஞ்சாலை முதல் நகராட்சி வளமீட்பு பூங்கா வரை சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலையில் கடைசிப்பகுதியில் உள்ள மயான பூமியில் தற்போது எரிவாயு தகன மையம் அமைக்கப்பட்டுள்ளதாலும், மயான பூமிக்கு செல்ல தேவையான சாலை வசதியினை ஏற்படுத்திட ஏதுவாக அப்பகுதியில் புதியதாக சிமெண்ட் சாலை அமைத்திடவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 2.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   ( ந.க.எண். 104/2023 அ1 )

நகர்மன்ற தீர்மான எண்: 377 நாள்: **28.12.2023**

**தீர்மானம் :** Wd 7, மயான பூமிக்கு CC Road அமைத்திட, ரூ.**2.10 L** அப்பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 9

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு பாலாஜி நகர், வள்ளலார் தெரு, டி.எச்.ரோடு மற்றும் மூகாம்பிகை நகர் பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் இதுநாள்வரை தினசரி பிளீச்சிங் பவுடர் கரைசல் மூலம் குளோரினேஷன் செய்யப்படுகிறது. அவ்வாறு நகராட்சி பணியாளர்கள் மூலம் பிளீச்சிங் பவுடர் கரைசல் மூலம் குளோரினேஷன் பணி மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்படுவதை தவிர்க்கவும், தற்போதைய நிலையில் திரவக்குளோரினேஷன் மூலமாக மட்டுமே குடிநீர் விநியோகம் மேற்கொள்ள வேண்டும் என அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்ட விவரப்படியான பணிகளை மேற்கொள்ளவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ( ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|
| 1 | 6 | பாலாஜி நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் திரவக்குளோரினேஷன் வசதி செய்தல் | 5.00 |
| 2 | 12 | வள்ளலார் தெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் திரவக்குளோரினேஷன் வசதி செய்தல் | 5.00 |
| 3 | 16 | டி.எச்.ரோடு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் திரவக்குளோரினேஷன் வசதி செய்தல் | 5.00 |
| 4 | 22 | மூகாம்பிகை நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் திரவக்குளோரினேஷன் வசதி செய்தல் | 5.00 |

அலுவலகக்குறிப்பு

1. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   ( ந.க.எண். 104/2023 அ1 )

நகர்மன்ற தீர்மான எண்: 378 நாள்: **28.12.2023**

**தீர்மானம் :** Wd 6,12,16 & 22 தற்போதைய நிலையில் திரவக்குளோரினேஷன் மூலமாக மட்டுமே குடிநீர் விநியோகம் மேற்கொள்ள அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளதால், அதற்கான பணிகளை மேற்கொள்ள, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்க நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று, செலவிணத்தினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 10</u>

பொன்னேரி நகராட்சியில் பொதுசுகாதார பணிக்கு தேவையான கிருமிநாசினிகள், புகைபோக்கி கொசு ஒழிப்பு மருந்துகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட குளோரினேஷன் செய்ய பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்பு தூள், பினாயில், அபேட், இதர பொதுசுகாதார பணிக்கு தேவையான பொருட்களை சப்ளை செய்வதற்கு **16.09.2022** அன்று விலைப்புள்ளி கோரியதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய RNM Enterprises , Chennai என்ற நிறுவனத்திற்கு நகர் மன்ற தீர்மானம் எண் **119** நாள் **21.09.2022**ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து **01.10.2022** முதல் ஓராண்டிற்கு உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தகாலம் **30.09.2023** உடன் முடிவற்ற நிலையில், தற்போது அதிக அளவில் பெய்த வடகிழக்கு பருவமழை காரணமாக பொதுசுகாதார அவசர அவசியம் கருதி

நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று RNM Enterprises , Chennai நிறுவனத்திடமிருந்து பொதுசுகாதார பொருட்களை கொள்முதல் செய்தமைக்கும் , 31.12.2023 வரை ஒப்பந்தகாலத்தை காலநீட்டிப்பு செய்யவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 341 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 379 நாள்: 28.12.2023

**தீர்மானம் :** பொது சுகாதார அவசர அசியம் கருதி, நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று RNM Enterprises, Chennai என்ற நிறுவனத்திடமிருந்து பொதுசுகாதார பொருட்களை கொள்முதல் செய்தமைக்கும், 31.12.2023 வரை ஒப்பந்தகாலத்தை கால நீட்டிப்பு செய்யவும், மன்றத்தின் அனுமதி வேண்டுவதால் – மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 11</u>

பொன்னேரி நகராட்சியில் பொதுசுகாதார பணிக்கு தேவையான கிருமிநாசினிகள், புகைபோக்கி கொசு ஒழிப்பு மருந்துகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட குளோரினேஷன் செய்ய பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்பு தூள் , பினாயில், அபேட், இதர பொதுசுகாதார பணிக்கு தேவையான பொருட்களை ஒப்பந்ததாரரிடம் கொள்முதல் செய்திட தோராய செலவினம் ரூ 5.00 /- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 341 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 380 நாள்: 28.12.2023

**தீர்மானம் :** பொது சுகாதார பணிக்கு தேவையான பொருட்களை ஒப்பந்ததாரரிடம் கொள்முதல் செய்திட தோராய செலவினம் ரூ.5.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுவதால் மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.

## <u>பொருள் எண் 12</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை 28 அவர்களின் கடிதம் ந.க.எண் 29766 / 2021/ எச்.1 நாள்:11.12.2023-ன்படி பொன்னேரி நகராட்சியில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொதுசுககாதாரம் அவசர அவசியம் கருதி சிறப்பு தூய்மை பணி மேற்கொள்ள மதுரை மாநகராட்சியிலிருந்து 44 தூய்மை பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு 05.12.2023 முதல் 09.12.2023 வரை சிறப்பு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டது, மேற்படி பணியாளர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.4000 வீதம் 44 நபர்களுக்கு ரூ.176000 வழங்கியது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 1376 /2023/எச்1)

நகர்மன்ற தீர்மான எண்: 381 நாள்: 28.12.2023

**தீர்மானம் :** மிக்ஜாம் புயலால் 44 தூய்மை பணியாளர்கள் மதுரை மாநகராட்சியிலிருந்து வரவழைக்கப்பட்டு 05.12.2023 முதல் 09.12.2023 வரை சிறப்பு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்ட ஒரு நபருக்கு ரூ.4000 வீதம் 44 நபர்களுக்கு ரூ.176000 வழங்கியது மன்றத்தின் அனுமதிக்கு– நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று – பொது நிதியின் கீழ் – செலவீனத்தை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 13

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின்படி பொன்னேரி நகராட்சியில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொதுசுககாதாரம் அவசர அவசியம் கருதி சிறப்பு தூய்மை பணி மேற்கொள்ள மதுரை மாநகராட்சியிலிருந்து வரவழைக்கப்பட்ட 1 துப்புரவு ஆய்வாளர் மற்றும் 44 தூய்மை பணியாளர்களுக்கு உடை, பரிசுப்பொருள் மற்றும் இனிப்பு கார வகைகள் வழங்கியமைக்கும், அதற்கான செலவினம் ரூ.62,655/-ஐ பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதி அளிக்கலாம்

(ந.க.எண். 1376 /2023/எச்1)

நகர்மன்ற தீர்மான எண்: 382 நாள்: 28.12.2023

**தீர்மானம் :** 1 துப்புரவு , ஆய்வாளர் மற்றும் புற தூய்மை பணியாளர்களுக்கு – உடை , பரிசுப்பொருள் மற்றும் இனிப்பு கார வகைகள் வழங்கியமைக்கு செலவினம் ரூ.62,655/-ஐ பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு – மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 14

பொன்னேரி நகராட்சியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கென கீழ்க்காணும் விவரப்படியான சமுதாயக்கழிப்பிடங்கள் உள்ளன.

| வரிசை எண் | வார்டு எண் | தெருவின் பெயர் |
|---|---|---|
| 1 | 1 | தர்மலிங்கம் தெரு |
| 2 | 3 | நெல்லூர் அம்மன் கோயில் தெரு |
| 3 | 5 | சர்ச் தெரு |
| 4 | 5 | சிவன்கோயில் தெரு |

| | | |
|---|---|---|
| 5 | 6 | கள்ளுக்கடைமேடு |
| 6 | 21 | இரட்டைமலை சீனிவாசனார் சாலை |
| 7 | 16 | ஜீவா தெரு |
| 8 | 24 | துர்கா நகர் |

மேற்படி சமுதாயக்கழிப்பிடங்களின் கழிவுநீர் தொட்டிகள் ( செப்டிக் டேங்க் ) நிரம்பியுள்ளதை அவ்வப்போது தனியார் கழிவுநீர் அகற்றும் ஊர்திகள் மூலம் அகற்றப்பட்டு வருகிறது. இதற்கான தோராய செலவினம் ரூ.1,00,000/- பொதுநிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
(ந.க.எண். 148 /2022/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 383 நாள்: **28.12.2023**

**தீர்மானம் :** சமுதாயக் கழிப்பிடங்களின்– கழிவு நீர் தொட்டிகள் நிரம்பியுள்ளதை, தனியார் கழிவுநீர் அகற்றும் ஊர்திகள் மூலம் அகற்றப்பட்டு, தோராய செலவினம் ரூ.1,00,000/– பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.

## <u>பொருள் எண் 15</u>

இந்நகராட்சி பகுதிகளில் தற்போது பெய்துவரும் வடகிழக்கு பருவமழையினை தொடர்ந்து புதியதாக உருவாகிவரும் மிக்ஜாம் புயல் தொடர்பான தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக தாழ்வான பகுதிகளில் இருந்து வெளியேறும் பொதுமக்களை தங்கவைக்க தேவையான நிவாரண மையங்களை தயார்நிலையில் வைத்திருக்கவும், புயல் காலத்தில் மின்தடை ஏற்படின் பொதுமக்களுக்கு தடையின்றி சீராக குடிநீர் விநியோகம் மேற்கொள்ள தேவையான ஜெனரேட்டர் வசதிகளை வாடகை அடிப்படையில் தயார் நிலையில் வைத்திருக்கவும், புயல் காலத்தில் முறிந்துவிழும் மரங்களை போக்குவரத்திற்கு இடையூறின்றி உடனுக்குடன் அப்புறப்படுத்த தேவையான மரம் அறுக்கும் கருவிகள் மற்றும் ஆட்களை தயார்நிலையில் வைத்திருக்க மாவட்ட ஆட்சித்தலைவர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் காணொலி ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தியதை தொடர்ந்து வாடகை அடிப்படையில் ஜெனரேட்டர் பயன்படுத்தவும், மரம் அறுக்கும் கருவிகள் மற்றும் ஆட்களை தயார் நிலையில் வைத்துக்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 2.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1 மிக்ஜாம் புயல் முன்னெச்சரிக்கை தொடர்பாக மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன்படி அவசர பணியாகக்கருதி நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.பி.ஜோதீஸ்வரன் அவர்களின் மூலமாக மேற்கொள்ள நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், பின்னர் அரசின் பேரிடர் நிவாரண நிதியின்கீழ் மானியம் பெறப்படின் ஈடு செய்துகொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். 354 /2023/இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 384 நாள்: 28.12.2023

**தீர்மானம் :** வடகிழக்கு பருவ மழை புயலிலும், மிக்ஜாம் புயலிலும், பாதிப்புகளை, சரிசெய்ய, பொது நிதியின் கீழ் வாடகை ஜெனரேட்டர் மரம் அறுக்கும் கருவிகள் மதிப்பீட்டுத்தொகை ரூ.2.70/– இலட்சத்திற்கு, மன்ற அனுமதி வேண்டியுள்ளதால் மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 16

இந்நகராட்சிக்குட்பட்ட பெரியகாவணம் சர்வே எண் 146 ல் பூங்கா அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் தற்காலிக கொட்டகைகள் அமைத்து ஆக்கிரமிப்பு செய்வதை தடைசெய்யக்கோரி திரு. எம்.மரியா அந்தோனி த/பெ மைக்கேல் மற்றும் சிலர் பொன்னேரியில் உள்ள மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் நகராட்சி ஆணையரை 4வது எதிர்மனுதாரராகக்கொண்டு வழக்கு O.S.No.47/2022ல் தொடர்ந்த வழக்கில் இந்நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு. எஸ்.நித்தியகுமார் ஆஜராகி வழக்கினை நடத்துவதற்கான வழக்கு கட்டணமாக ரூ.9500/– செலுத்தக்கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி வழக்கு கட்டணம் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண். 1377/2023/F1)

நகர்மன்ற தீர்மான எண்: 385 நாள்: 28.12.2023

**தீர்மானம் :** சர்வே எண் 146 – ல் பெரியகாவணம், பூங்கா அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் – ஆக்கிரமிப்பை அகற்றி S.Nithyakumar - க்கு வழக்கு கட்டணமாக ரூ. 9500 /– செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு – மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 17

நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களின் கடித ந.க.எண்17404/2022/எம்1, நாள். 13.09.2023ன்படி , மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி வழங்கப்படும் திட்டத்தின் கீழ், 2023–2024 ஆம் ஆண்டு, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அரசு பள்ளிகளில் 01 முதல் 05–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி பரிமாறும் பணியாளர்களுக்கு நவம்பர் 2023 முதல் ஏப்ரல் 2024 வரையிலான 6 மாத காலத்திற்கு மதிப்பூதியமாக ரு. 45,000 /– வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண். 223 /2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 386 நாள்: **28.12.2023**

**தீர்மானம் :** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி வழங்கப்படும் திட்டத்தின் கீழ் – **2023** – **2024** – ஆம் ஆண்டு சிற்றுண்டி பரிமாறும் பணியாளர்களுக்கு – Nov-2023 முதல் April **2024** – **6** மாத காலத்திற்கு மதிப்பூதியமாக ரூ. **45000/–** பொதுநிதியில் வழங்க மன்றம் அனுமதி அளிக்கிறது.

## மேசைப்பொருள்18

இந்நகராட்சியில் **1**வது வார்டு எல்லைக்குட்பட்ட இந்திரா நகர், டோபிகானா மற்றும் நரிக்குறவர் காலனி ஆகிய பகுதிகளில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டதை தொடர்ந்து அவர்களுக்கு தேவையான பாய் , பெட்ஷீட் மற்றும் பள்ளி செல்லும் மாணவர்களுக்கு தேவையான புத்தகப்பை போன்றவற்றை வழங்குமாறு பொன்னேரி சார் ஆட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் அறிவுறுத்தியதை தொடர்ந்து **200** எண்ணிக்கையில் முறையே பாய், பெட்ஷீட் மற்றும் பள்ளி செல்லும் மாணவர்களுக்கு தேவையான புத்தகப்பை போன்றவற்றை M/s BAK Shopping Centre, எண்.**107**, அரிஅரன் பஜார் தெரு, பொன்னேரி என்ற நிறுவனம் மூலம் கொள்முதல் செய்ததற்கான பட்டியல் தொகை ரூ. **1,26,260 /-** வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மேற்படி பணிக்குண்டான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். **354** /2023/இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 387 நாள்: **28.12.2023**

**தீர்மானம் :** மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட **1**வது வார்டு – இந்திரா நகர், டோபிகானா மற்றும் நரிக்குறவர் காலனி **200** எண்ணிக்கையில் – தேவையான புத்தகப்பை, பாய், பெட்ஷீட் M/s BAK Shopping Centre , ரூ. **1,26,260 /-** வழங்கிட – பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

(ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி
திருவள்ளூர் மாவட்டம்